**தலைப்பு 273 – புத்தளம் மாவட்ட செயலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 257 – புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களுடன் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களையும் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட இந்த அறிக்கையின் 3.7(ஐ), 3.6 (ஆ), 3.7 (ஒ), 2.4(1) (ஆ) மற்றும் 3.7(அ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்கீட்டுக் குறைப்பாடுகள்**

**(அ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2022 திசெம்பர் 20 ஆம் திகதிய SA/GFS/01/01/08 - Volume ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மாவட்ட செயலகத்திற்கு உரியதாக இனங்காணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்திற்கு உரியதாக இனங்காணப்பட்ட 47 கிராம உத்தியோகத்தர் | மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் 2023 ஆம் ஆண்டு கணக்கீடு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அந்த மதிப்பீட்டுப் பெறுமதி கிடைக்காமையின் அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகங்கள், 08 உத்தியோகபூர்வ விடுதிகள், அரசாங்கத்தின் 13 பொதுக் கட்டிடங்கள் மற்றும் சனசமூக மண்டபம் என்பன மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 11 பிரதேச செயலகங்களுக்குரிய நிறைவேற்றும் மற்றும் நிறைவேற்று அல்லாத கூட்டுமொத்தமாக 17,317 சதுர அடி அளவான 14 உத்தியோகபூர்வ இல்லங்கள் மதிப்பீடு செய்து நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுப் பெறுமதி பெறப்பட்டதன் பின்னர் 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அந்த மதிப்பீட்டுப் பெறுமதி கிடைக்காமையின் அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 16 பிரதேச செயலகங்களின் மூலம் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை நீண்டகால ரீதியில் வாடகைக்கு வழங்கப்பட்ட ஒட்டுமொத்தமாக அண்ணளவாக 3387 ஏக்கர் அளவான காணி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகள் பிரதேச செயலகங்களின் பொறுப்பில் காணப்பட்ட போதிலும் அந்தக் காணிகள் பிரதேச செயலாளரின் சொத்தொன்றாக கணக்கீடு செய்வதற்கு தேவையற்றதாக இருக்கின்றமையால் கணக்கீடு செய்யப்படவில்லையென அறியத்தருகின்றோம். | காணிகளின் பெறுமதிக மதிப்பீடு செய்து கணிப்பீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | இடர் முகாமைத்துவ இணைப்பு தெரிவின் மூலம் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த டக்டர் மற்றும் 08 பௌசர்கள், 04 தண்ணீர்ப் பம்பிகள், 08 நீர்த்தாங்கிகள், படகு மற்றும் எஞ்சின் ஒன்று, 18 உயிர்காப்பு படகுகள், 01 மெகா போன் மற்றும் 01 உயிர்காப்பு கையிறுகள் என்பன கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடர் முகாமைத்துவ அலகின் மூலம் கிரயப் பெறுமதி பெறப்பட்டு இந்த ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். டெக்டர் மற்றும் பௌசர் புத்தளம் மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்பட்ட பின்னர் கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சொத்துக்களின் கிரயத்தைப் பெற்று கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (v) தேசிய இடர் உதவி சேவை நிலையத்தின் கீழ் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட 09 லொறி பௌசர் கையேற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | லொறி பௌவுசர் கையேற்கப்பட்ட பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களைக் கையேற்று கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) **இணக்கம் செய்யப்படாத கணக்குகள்** | | |
| மாவட்ட செயலகத்தில் 2023 ஆம் ஆண்டில் செலவினப் பேரேடு மற்றும் திறைசேரி கணனி உறுப்புகளின் பிரகாரம் 12 செலவின விடயங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 159,402,469 இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டது. | செலவினப் பேரேட்டை சரிசெய்யுமாறு விடயப் எழுதுவினைஞருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | செலவினப் பேரேடு மற்றும் திறைசேரி கணனிக் குறிப்புகள் மாதாந்தம் இணக்கம் செய்யப்படாமை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மிகை மதிப்பீடு தயாரித்தல் | | |
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு இயலுமானவரை முழுமையாகவும், சரியாகவும் தயாரிக்க வேண்டுமென காண்பிக்கப்பட்ட போதிலும் செலவின விடயம் 1403 மின்சாரம் மற்றும் நீருக்காக வருடாந்தம் பல வருடகாலமாக மிகை மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் சேமிப்பு ரூபா 6,710,715 அதாவது மதிப்பீட்டில் 34 சதவீதமாக இருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கு தேவையான மதிப்பீடு தயாரித்தல் 2022 செப்தெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதுவரையில் மின்சாரப்பட்டியல் அதிகரிக்கும் முன்மொழிவு மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டமையால் அதிக செலவாகும் என எதிர்பார்த்து மின்சாரப் பட்டியல்களுக்கு இணங்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மின்சாரம் மிகை மதிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் வேண்டும். |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 464,855 தொகையும், ஓய்வுபெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 591,409 தொகையும், வேலை நீக்கம் செய்யப்பட்ட 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 401,619 தொகையும், சேவையைக் கைவிட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 513,405 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,971,288 ஆன ஊழியர் கடன் நிதி ஒன்று அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 01 வருடத்திற்கும் 15 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற இந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 04 உத்தியோகத்தர்களின் கடன் மீதி தற்போது செலுத்தப்படுவதுடன் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி கணக்குப் பொழிப்புக்களின் மூலம் மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடுதற்கும் ஏனைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றது. | கடன் மீதிகளை நிறுத்தி வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)i. கற்பிட்டி பிரதேச செயலக பிரிவில் மாதுளை கிராமம் ஒன்றை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா.6,988,313 செலவில் 40 விவசாயிகளுக்காக கன்றுகள் மற்றும் பசளை, நீர் வழங்கல் உபகரணங்கள் போன்றவையாக ஒரு விவசாயிக்கு ரூபா.200,000 தொகைக்கு அண்மித்த நலன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இளைஞர் சமூகத்திற்கு விவசாய கைத்தொழிலில் கவர்ச்சி ஏற்படுத்தும் | விவசாயக் கைத்தொழில் தொடர்பில் மற்றும் நவீன விவசாய தொழில்நுட்ப முறைமைகள் தொடர்பாக உள்ளபடியான மற்றும் பிரயோக அனுபவங்களை உடைய விவசாயிகளை தெரிவு செய்தல் மிகவும் பொருத்தமாக இருந்தமையால் அவ்வாறான விவசாயிகள் தரப்பினரை தெரிவுசெய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் அரசாங்கம் எதிர்பார்க்கின்ற நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படை நோக்கமாக இருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட சகல விவசாயிகளும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற திகதி வரை வணிக மட்டத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தரப்பினர் ஆகும். | | |
| ii. | “ரெட் ஏன்ஜல்” மாதுளை இனம் இந்தப் பிரதேசத்தில் பொருத்தமானதா என்பதை உறுதிப்படுத்தாமல் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் மாதிரிகளின் பிரகாரம் லேயர் கன்றுகள் வழங்க வேண்டியிருந்த போதிலும் உரிய நியமங்களில் இல்லாத கன்றுகள் வழங்கப்பட்டமையால் 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி வரை ரூபா 450 வீதம் கொள்வனவு செய்யப்பட்ட 7400 கன்றுகளில் ரூபா 1,535,850 பெறுமதியான 3413 கன்றுகள் இறந்திருந்தது. | கற்பிட்டியில் காணப்படுகின்ற காலநிலை மற்றும் மண்ணின் தன்மையின் அடிப்படையில் உரிய இனம் மிகவும் வெற்றிகரமாக பயிர்செய்யக்கூடிய நாற்றுகளாக விவசாயிகளால் இனங்காணப்பட்டிருந்தது. | உரிய நியமத்தை உடைய லேயர் கன்றுகள் உத்தியோகத்தர்களால் பரீட்சித்து கையேற்கப்படல் வேண்டும். |
| iii. | 40 நலனாளிகளுக்காக தண்ணீர்ப் பம்பிகள், குழாய்க் கிணறுகள் மற்றும் விசிறும் நீர்வழங்கும் முறைமைகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 3,314,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த உபகரணங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | பிரதேசத்தில் காணப்படுகின்ற வெப்பநிலையின் அடிப்படையில் கணிசமான நீர் அளவு பெறவேண்டியிருந்தமையால் ஒவ்வொரு பயிர்செய்கைக்காகவும் தனித்தனியாக நீரை வழங்குவதற்கு குழாய்கிணறுகள் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் செயற்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது வணாத்தவில்லு பிரதேச செயலகத்தால் கிராமியக் கைத்தொழில் மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் பிரம்பு ஒதுக்கப் பிரதேசத்தில் 15 ஏக்கரில் பிரம்புக் கன்றுகளை | மனிதர்களினால் தீ வைக்கப்பட்டு அழிவடைந்த நிலத்தில் பிரம்பு ஒதுக்கப் பிரதேசம் ஒன்றாக உற்படுத்துவதற்காக 15 ஏக்கர் நில அளவு பிரம்புக் கன்றுகளை நட்டுதல் தற்போது | செயற்திட்டத்தை செயற்திறனாக நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நிறைவேற்றுவதற்கும் மேற்பார்வை செய்யப்பட்டதற்கான |

| | | |
|---|---|---|
| நடும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 1,973,994 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 465 மனித நாட்களுக்கு ரூபா 790,500 தொகையும் 5250 பிரம்புக் கன்றுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 630,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதும் கன்றுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் வேலைத்தளத்திலிருந்து மேற்பார்வை செய்திருக்கவில்லை. | வரையில் அதன் தன்மை பிரம்பு ஒதுக்கப் பிரதேசமாக உட்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 1,973,994 தொகை பயனற்ற செலவினமாக இல்லாதிருந்ததுடன் அது எதிர்கால சுற்றாடலுக்கு நிலைபேறான மற்றும் பொருளாதாரத்தில் நிலைத்திருத்தல் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக வழியமைக்கும் செயற்திட்டமாக குறிப்பிட முடியும்.<br><br>ஊழியர் கிரயம் 465 மனித நாட்களுக்கு ரூபா 790,500 தொகையும் 5,250 பிரம்பு கன்றுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 630,000 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் சரியான தன்மையில் வேலைத்தளத்திலிருந்து மற்றும் வீடியோ தொழில்நுட்பம் ஊடாகவும் அவதானிக்கப்பட்டது. | சான்றிதழ்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | | |
| (i) | II தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயம் | 2,569,682 | கணக்காய்வு அறிக்கை மூலம் எந்தவொரு உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகள் அல்லது தவறுகள் சுட்டிக்காட்டப்படுமிடத்து முறையான ஒழுக்காற்று பரிசோதனையை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் ஆணைமடு பிரதேச செயலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மிகை மதிப்பீடு தயாரித்த குற்றத்தின் அடிப்படையில் குற்றப்பத்திரம் ஒன்று விநியோகிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த போதும் மிகுதி எந்த நடவடிக்கையும் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சகல அறிக்கைகளும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒழுக்காற்று அதிகார தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் 2024.04.08 ஆம் திகதியில் மீள்நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனை நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | II தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13 மற்றும் 12 ஆம் உப பிரிவுகள் | சந்தேகத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் போதியளவான குற்றப்பத்திரிகை வெளிப்படுத்தப்படுமாயின் குற்றப்பத்திரிகையின் வரைவு ஒன்றைத் தயாரித்து உரிய அதிகாரத் தரப்பினருக்கு சமர்ப்பிப்பதற்கு ஆரம்ப விசாரனை உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கவேண்டிஇருந்ததுடன் 14 ஆவது பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தரால் குற்றப்பத்திரிகை விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 05 சந்தர்ப்பங்களின் ஆபாது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு உத்தியோகத்தர் தொடர்பாக தற்போது முறையான ஒழுக்காற்று விசாரனை பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை ஒன்றினைந்த இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒழுக்காற்று கட்டளை விநியோகிக்கும் போது உத்தியோகத்தர்களின் கடந்தகால கடமைகள் தொடர்பாகவும் கண்டறிதல்கள் மேற்கொள்ளபட்டமையால் அதற்காக சிறிது காலம் எடுத்திருந்தது. ஏனைய உத்தியோகத்தர் தொடர்பாக முறைப்பாடுகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களினால் குற்றப்பத்திரிகை திருத்துவதற்கு கோரப்பட்டதன் காரணமாக முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு தாமதம் அடைந்திருந்தது. தற்போது குற்றப்பத்திரிகை திருத்தப்பட்டு முறையான ஒழுக்காற்று விசாரனை மேற்கொள்ளப்படுகின்றது | முறையான ஒழுக்காற்று விசாரணைகளை செய்து விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (iii) | II தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயததின் 21.1 ஆம் | முறையான ஒழுக்காற்று பரிசோதனை வெளிப்படையான சபையொன்றாக | தற்போது பக்கச்சார்பற்ற சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. | முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உப பிரிவு | | நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் முறையான ஒழுக்காற்று விசாரணை தாமதம் இன்றி விசாரணை அறிக்கை நடாத்தி தாமதமின்றி பரிசோதனை அறிக்கை அதிகாரத்தரப்பினருக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் குற்றப்பத்திரிகை விநியோகிக்கப்பட்டு 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 02 சந்தர்ப்பங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொண்டு பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (iv) | II தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 22.2 ஆம் உப பிரிவு | 546,992 | ஒழுக்காற்று விசாரணைக்காக அரசாங்கத்திற்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற செலவினங்களைக் குறைத்துக் கொள்வதற்கு சரியான படிமுறைகளை எடுத்தல் ஒழுக்காற்று அதிகாரத்தரப்பினரின பொறுப்பாக இருந்த போது மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற 07 ஒழுக்காற்று விசாரணைகளுக்கா | இது தொடர்பாக சகல அறிக்கைகளும் ஒழுக்காற்று அதிகாரத் தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் மீள்நினைவூட்டல் கடிதம் ஒன்று 2024.04.08 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | க ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 546,992 செலவினம் மேற்கொள்ளப் படடிருந்தது. | | |
| (ஆ) | அரச நிர்வாக சுற்றறிக்கை | | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய இல 09/2009 என்ற சுற்றறிக்கையின் 02(iv) ஆம் பிரிவு | 1,407, 649 | நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறைதின சம்பளம் போன்றவை உள்ளபடியான கடமை நேரத்திற்குப் பின்னர் செலுத்தப்படுகின்ற படிகளுக்காக காலத்தை அடிப்படையாகக் கொள்வதாயின் அந்தக் காலம் அந்த நேரம் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் புத்தளம் மற்றும் ஆணைமடுவ பிரதேச செயலகங்களில் பதவி நிலை உத்தியோத்தர்களுக்கு விடுமுறை தின படி , சம்பளம், விடுமுறை தின கடமை சம்பளம் | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய இலக்கம் 18/2001 என்ற சுற்றறிக்கை | - | நாடளாவிய சேவைகளில் உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடைவ ஒரு சேவை நிலையத்தில் சேவையாற்றுவார்களாயின் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் புத்தளம் மாவட்டத்தில் 16 பிரதேச செயலகங்களில் 355 உத்தியோகத்தர்கள் தொடர்பாக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் இடம்மாற்றலுக்காக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஒரு பகுதி மாத்திரம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வருடாந்தம் 05 வருடங்களை மிஞ்சிய ஊழியர்கள் தொடர்பான அறிக்கை அமைச்சுக்கு அனுப்பி மேற்கொள்ள வேண்டிய ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் இடம்மாற்றம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டி | - | பெறுகை நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது மூன்று வருடகாலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான பிரதான பெறுகைத் திட்டம் தயாரித்து ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது தினந்தோறும் நாளது வரையாக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரிசெய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் நாளது வரையாக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இலக்கம் MOD/CSD/ REPORT/1/ CIRCULAR (2023) என்ற 2023.09.19 ஆம் திகதி இலக்கம் 2023/04 சுற்றறிக்கயைின் 12.1 ஆம் பிரிவு | - | குறித்துரைத்த கால எல்லையின் துப்பாக்கிகளின் அனுமதிப்பத்திர குறிப்பு புத்தகங்களை புறக்கணிக்கின்ற துப்பாக்கிகளின் அனுமதிப்பத்திரத் தாள்கள் தொடர்பான தகவல்கள் துப்பாக்கிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்காக உரிய பிரிவு பொறுப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மூலம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் புத்தளம் மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த 1808 துப்பாக்கிகளின் அனுமதிப்பத்திரங்கள் இன்றி அனுமதியற்ற 763 துப்பாக்கிகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாதிருந்த துப்பாக்கிகள் ஏதாவது அளவொன்று பொலிஸ் நிலையத்திற்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்மையால் அந்த ஆயுதங்கள் நிரந்தரமாக அரசாங்கத்தின் கையேற்குமாறு நிரந்தரமாக கையேற்கப்பட்ட ஆயுங்கள் யாவும் தகவல் பொலிஸ் நிலையங்களில் யாவற்றினதும் தகவல்கள் பொலிஸ் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் தொடர்பான தகவல்கள் எங்களுக்கு அனுப்புமாறு சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.5 வரித் தேவைப்பாடுகளுன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டுக்கு இடையிலான காலத்தில் கறுவலகஸ்வெவ, ஆராய்சிக்கட்டுவ, முந்தலம், மாதம்பை மற்றும் நவகத்தேகம என்ற 05 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய கூட்டுமொத்தமாக 840.8 ஏக்கர் 144 றூட் 94 பேர்ச் அளவினை உடைய 37 காணிக்கூறுகளுக்காக வாடகை தயாரிக்கும் நடவடிக்கைகள் பல வருடகாலம் முதல் காணி ஆணையாளர் நாயக அலுவலகத்தில் தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டமையினால் அந்தக் காணிக் கூறுகளை வெளித்தரப்பினர்களினால் அரசாங்கத்திற்கு எந்தவொரு கொடுப்பனவு மேற்கொள்ளாமல் வணிக மற்றும் விவசாய ரீதியான நடவடிக்கைகளுக்காக உரிமை கோருகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக நிர்வாகத்தின் பின்தொடர் நடவடிக்கைகள் மந்த கதியில் காணப்பட்டது. | காணி நீண்ட கால ரீதியில் வாடகைக்கு வழங்குதல் பிரதேச செயலத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்ற பணியாக இல்லாதிருந்ததுடன் அதற்காக அரச நிறுவனங்களில் அநேகமானவை நிறைவேற்ற வேண்டியிருந்த விடயங்கள் உள்ளது. அந்த ஒவ்வொரு நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளுக்கிடையே ஏதாவது தாமதம் ஏற்படக்கூடியதாக இருந்ததுடன் அந்த பிரதேச செயலாளருக்கு நேரடியான பொறுப்பு காணப்படவில்லை. | அரசாங்கத்துக்குரிய காணிகளை வாடகைக்கு வழங்குதல் மற்றும் வரி வருமானங்களை அறவிடுதல் செயற்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் நகர எல்லையில் அமைந்துள்ள 02 றூட் 22 பேர்ச் அளவினை உடைய அசோக்க சிரிமா திரையரங்கு அமைந்துள்ள காணி 2014 ஆம் ஆண்டு முதல் புதிய வாடகையாளருக்கு 30 வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டதுடன் 2011 ஆம் | வாடகைப் பணத்தை பதிவழிப்பதற்கு காணி அமைச்சரின் அங்கீகாரம் 2021.08.18 ஆம் திகதி கிடைக்கப்பெற்றதாக 2021.08.19 ஆம் திகதி காணி ஆணையாளரின் இலக்கம் 4/10/12226 கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாடகையை | அரசாங்கத்துக்குரிய காணிகளை வாடகைக்கு வழங்குவதற்காக பெறவேண்டியிருந்த வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டு முதல் 2021 வரை அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 25,000,000 வாடகைப் பணம் பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிவழித்தமை தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |

**2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நவகத்தேகம பிரதேச செயலகத்தில் உத்தியோகபூர்வ வாகனத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக அனுப்பியமையால் 2023 ஏப்ரல் 06 ஆம் திகதி முதல் 2023 யூன் 16 ஆம் திகதி வரையான காலத்தில் குழாம் வாகனத்திற்காக அரசாங்க செலவினத்தில் ரூபா 142,975 எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பதவிக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படி மேற்கூறப்பட்ட 03 மாதங்களுக்காக ரூபா 155,925 பெறப்பட்டிருந்தது. இலக்கம் 11/2006 அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக எரிபொருள் படிக்கு மேலதிகமாக எரிபொருளுக்காக செலவிட்ட ரூபா 142,975 தொகையில் ரூபா 51,150 மீள செலுத்தப்பட்டுள்ளதென ரூபா 91,825 ஐ தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழாம் வாகனம் பிரதேச செயலாளரினால் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்பங்களுக்காக அவரினால் வாகனத்தின் எரிபொருள் செலவினம் கையினால் அவரால் செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 ஏப்ரல் எரிபொருள் படி பெற்றுக்கொள்வதற்கு உரித்துள்ளது. மே மாதத்திற்காக குழாம் வாகனம் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அவரினால் எரிபொருள் பயன்படுத்தப்படாதிருந்தமையினால் மே மாதத்திற்குரித்தான எரிபொருள் படி அவருக்கு மீள அரசாங்கத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. யூன் மாதம் 06 மற்றும் 23 ஆம் திகதிகளில் குழாம் வாகனங்களுக்கு எரிபொருள் பயன்படுத்தியதன் பின்னர் அவருக்கு அவ்வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ வாகனத்தை பழுதுபார்த்து கையளிக்கப்பட்ட பின் யூன் மாதத்திற்குரிய எரிபொருள் படி வழங்கப்பட்டுள்ளது. யூன் மாதத்தில் எரிபொருள் படி பெற்றுக்கொள்வதற்கு | மேலதிக செலுத்துதல்கள் உள்ள உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உரித்து உள்ளமையினால் அது வழங்கப்பட்டுள்ளது. மேலும் திருத்துவதற்கு உரிய தொகை இல்லாதுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (ஆ) (i) | 2019 – 2021 காலப்பகுதியில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்ட செயலகத்தின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலாள நெல் ஆலை உரிமையாளர்கள் ஊடாக நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு 2020/21 பெரும் போகம் மற்றும் 2021 சிறுபோகத்தின் போது ஆனமடுவ, நவகத்தேகம மற்றும் கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவுகளின் 20 நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட பணத்தில் இலங்கை லங்கா ச.தொ.ச இற்கு 2022 மார்ச் 15 ஆம் திகதியில் கிடைக்க வேண்டியிருந்த அரிசி கிலோகிராம் 1429338 இற்காக ரூபா 111,208,565 தொகை 2023 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோத்தரினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அரசாங்கத்தின் மேற்கூறப்பட்ட நோக்கமான விவசாயிகளின் மிகை நெல் இருப்பினை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் சத்தேசயின் மூலம் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் அரிசியினை வழங்குதல் என்ற நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அரசாங்கத்தின் பணம் | வழங்கப்படவேண்டிய அரிசிகளின் நிதிசார் பெறுமதி அரசாங்கத்திற்கு செலுத்துமாறு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஒரு பகுதி பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் 2024.04.30 ஆம் திகதி வரை மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 106,773,565.39 தொகை அந்த தொகையை அறவிடும் முதல் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பணத்தை அறவிடுவதற்கு செயற்திறனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைகேடாகவும் மற்றும் முறையற்ற வகையிலும் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. | | |
| (ii) | மாவட்ட விவசாயப் பணிப்பாளரின் 2021 பெப்ரவரி 25 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரம் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தரின் பரிந்துரையைக் கவனத்தில் கொள்ளாமல் கமநல சேவை நிலையங்கள் சேவை செயற்குழுக்களின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள பசளை பெயர் பதிவேட்டில் பயிரிடப்பட்ட வயல் ஏக்கர்களின் எண்ணிக்கை குறித்துரைத்தவாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் நவகத்தேகம மற்றும் ஆணமடுவ பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் அந்தத் தேவையினை நிறைவேற்றாமல் 2021 சிறுபோகத்தின் போது பசளை பெயர்ப் பதிவேட்டில் பெயர் குறிப்பிடாத 142 நபர்களிடமிருந்து 710,000 நெல் கிலோகிராம் இற்காக கொள்வனவு செய்யப்பட்டதாக பதிவேடு தயாரித்து ரூபா 31,240,000 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் சந்தர்ப்பத்தில் விவசாய ஆராட்ச்சி உத்தியோகத்தர்கள் தொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டமையினால் பசளை பெயர் பதிவேட்டை பரீட்சித்து நெல் கொள்வனவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்ட போதிலும் விரைவாக அந்த நிகழ்சித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டியதன் காரணமாக முன்னாலிருந்த விவசாய பணிப்பாளரினால் நெல் வழங்குகின்றவர்களிடமிருந்த தமது விவசாயியாக வழிப்படுத்தப்பட்ட கடிதத்தைப் பெற்று நெல் கொள்வனவு செய்யுமாறு வாய் மூலம் பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கியதன் காரணமாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2021 சிறு போகத்திற்குரிய நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் பெயர்ப் பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட 11 விவசாயிகளினால் வழங்கப்பட்ட எழுத்து மூல கூற்றின் பிரகாரம் எந்த ஒரு நெல் அளவும் நெல் ஆலை | நெல் கொள்வனவு செய்யும் செயற்பாடுகளில் மோசடிகள் அல்லது தவறுகள் ஏற்படாத வகையில் சகல நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அந்த செயற்பாடுகள் மிகவும் சிறந்த மேற்பார்வைக்காக | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் அதிகாரத்தரப்பினரால் உரிய மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

உரிமையாளர்களுக்கு வழங்க முடியாதிருந்த நெல் கிலோகிராம் 55,000 இற்காக ரூபா 2,420,000 விவசாயிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட பின்னர் அந்தத் தொகை விவசாயிகளால் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் நவகத்தேகம பிரிவில் 14 விவசாயிகளிடமிருந்து நெல் கிலோகிராம் 5000 வீதம் மொத்தமாக கிலோகிராம் 70,000 பெறப்பட்டமைக்கான பத்திரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளின் கணக்குகளுக்கு ரூபா 3,180,000 செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட எழுத்துமூல கூற்றுக்களின் பிரகாரம் அவர்களால் கிலோகிராம் 28000 அளவு மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன் வேறுபாடான நெல் கிலோகிராம் 42000 இன் ரூபா 1,848,000 நெல் உரிமையாளர்களால் விவசாயிகளிடமிருந்து மீளப்பெறப்பட்டிருந்தது.

விவசாயத்துறையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக உரிய பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நெல் கொள்வனவு சந்தர்ப்பங்களில் நெல் ஆலையில் இருப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அவர்களினாலும் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நெல் கொள்வனவு செய்யப்படும் போது கொள்வனவு செய்யப்பட்ட அளவு உறுதிப்படுத்திக் கொள்ளவதற்கு மாவட்ட செயலகத்தால் மாதிரிப்படிவம் 03 அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒவ்வொரு மாதிரிப் படிவமும் சரியாக நிரப்பி தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கிடைக்கின்ற ஆவணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி பிரதேச செயலாளரால் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் போலியான அனுமதிப் பத்திரம் தயாரிப்பதற்குரிய தரப்பினர் ஒன்று சேருதல் மேற்கொள்ள முடியுமாக இருந்த போதும் உரிய நெல் அளவு நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கையளிக்கப்பட்டமைக்குரிய விவசாயிகளால் உரிய படிவம் கையொப்பமிட்டு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பது

| | | |
|---|---|---|
| | தொடர்பில் தற்போது கவணம் செலுத்தப்பட்டுள்ளது. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தளம் மாவட்ட செயலகத்தில் ஒவ்வொரு பிரிவுகளினாலும் அடையப்பட வேண்டிய இலக்குகளைக் காண்பிக்கின்ற செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அடையப்பட்டிருந்த இலக்குகள் அதாவது செயல் முன்னேற்றத்தைக் காண்பிக்கின்ற அறிக்கை ஒன்று தயாரிக்காமையின் காரணமாக அந்த செயற்திட்டத்தில் காண்பிக்கப்படுகின்ற சகல இலக்குகளும் அடையப்பட்டிருந்ததா என் கணக்காய்வில் உறுதிப்படத்த முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய ஒவ்வொரு செயற்பாடுகளினதும் செயல்முன்னேற்றத்தினைக் காண்பிக்கின்ற அறிக்கை ஒவ்வொரு செயற்பாடுகளையும் மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்கு உள்ளதுடன் ஒன்றிணைந்த செயற்திட்ட அறிக்கை தயாரித்தல் தவறினால் மேற்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் ஒன்றிணைந்த செயல்முன்னேற்ற அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்ததாக் நிறைவேற்றப்பட்ட பணிகளில் அடையப்பட்ட இலக்குகளைக் காண்பிக்கின்ற செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாதம்பை பிரதேச செயலகத்தால் 2019 ஆம் ஆண்டின் போது கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கூட்டுப்பெறுமதி ரூபா 84,152,801 செலவினத்தில் அமுல்படுத்தப்பட்ட 09 குடிநீர் செயற்திட்டங்களில் அந்த நீர் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான நிதி வசதிகள் கிடைக்காமையின் அடிப்படையில் மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி | செயற்திட்டத்திற்காக இதுவரை புத்தளம் மாவட்டத்தின் சமூக நீர்வழங்கல் பிரிவினால் திட்டமிடப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது கோன்கஸ்யாய கிராமத்தில் குடிநீர் செயற்திட்டம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி செயற்திட்டத்தின் வேலைகளும் | செயற்திட்டங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காக பயன்படுத்தப்படாமல் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயனற்றுக் காணப்பட்டது. | மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் சமர்ப்பிக்கப்பட்ட ‘‘கம சமக பிலிசந்தரக்’’ கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாதம்பை பிரதேச செயலகத்தால் கூட்டுப்பெறுமதி ரூபா 3,357,861 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 04 ‘‘சேவா பியச’’ கட்டிடங்கள், 02 பலநோக்கு கட்டிடம் நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான மிகுதி நிதி வசதி கிடைக்காமையின் அடிப்படையில் அந்த 06 செயற்திட்டங்களும் அதன் நிர்மான நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக தேவையான நிதியேற்பாடுகளை வழங்குமாறு கோரி 2023.11.07 ஆம் திகதி கௌரவ உள்நாட்டு அலுவலல்கள் மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சருக்கும் மற்றும் செயலாளர் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கும் கோரி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் போது நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் தம்மன்நாவெட்டி விகாரைக்கு முன்னால் உடல் ஆரோக்கிய நிரல் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 894,311 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் காடு வளர்ந்திருந்தது. | பிரதேச இணைப்புக் குழுவின் அங்கீகாரத்துடன் அமுல்படுத்துவதற்குத் தேவையான முன்னுரிமைச் செயற்திட்டமாக முன்மொழியப்பட்ட செயல்திட்டமாகும். உடல் ஆரோக்கிய நிரல் ஒன்றை நிர்மாணிக்க தொடர்ச்சியாக நிர்மாணித்து தொடர்ச்சியாக பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் மழை காலத்தின் போது பயன்படுத்துதல் குறைவான சந்தர்ப்பங்களில் காடு | பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வளர்ந்த நிலைமையும் காணப்படுகின்றது. | |

**3.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாத்தாண்டிய பிரதேச செயலகத்தால் 2014 – 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்தில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 10 செயற்திட்டங்களுக்காக கூட்டுப்பெறுமதி ரூபா 6,692,719 இற்கு மேற்பட்ட தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த 10 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பித்து 04 வருடங்கள் முதல் 09 வருடங்கள் வரையிலான கால வீச்சினைக் கடந்திருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மொத்தமாக ரூபா 3,350,849 செலவில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டடிருந்த 04 செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு பயனற்ற வகையில் காணப்பட்டது. | செயற்திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்வதற்கு உதவியாக பிரதேச இணைப்புக் குழு, உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். அவ்வாறே 2024 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியேற்பாட்டின் கீழ் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கட்டுநிதிகளைப் பெற்று செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆணமடுவ பிரதேச செயலகத்தால் 2016 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 4,965,000 தொகை செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 08 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | உரிய நலன்புரி சங்கம் மற்றும் அரசியல் அதிகாரத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியேற்பாட்டின் கீழ் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கட்டுநிதிகளைப் பெற்று செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் கையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முந்தலம் பிரதேச செயலகப் பிரிவில் கட்டிடம் மற்றும் ஆணமடுவ பிரதேச செயலகத்தில் கட்டிடங்களின் மிகுதி வேலைகள் பூர்த்தி செய்வதற்கு உரிய பெறுகை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக பெறுகை நடைமுறை கோவையின் மேலதிகம் இலக்கம் 32 இற்கு இணங்காத வகையில் ஒரு தினம் மாத்திரம் சராசரியான பொதுவான கடமை நேரத்தில் கூடப்பட்ட பெறுகைக் குழுவிற்காக 09 உத்தியோகத்தர்களுக்கு படியாக கூட்டுமொத்தமாக ரூபா 99,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | படிகளைப் பெற்றுக்கொள்வதாயின் பொதுவாகன கடமை நேரங்களுக்கு இடையூறு இல்லாத வகையில் பிற்பகல் 3 மணிக்கு பின்னர் கூட்டம் நடாத்த முடியும் என் அரச நிர்வாக நிதி சுற்றறிக்கை 01/2017(1) ii பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவான நிலைமையில் ஆகக் குறைந்தது 04 கூட்டங்கள் நடாத்தப்பட்ட போதும் கூட்ட அறிக்கை பெறுகைத் தீர்மாணம் எடுக்கப்பட்ட கூட்டத்திற்காகவே தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் மேலதிகம் இலக்கம் 32 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.10.1 இன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு 2024 ஆம் ஆண்டிற்காக சுத்திகரிக்கும் சேவைகளை வழங்குவதற்குரிய நிறுவனத்தைத் தெரிவு செய்தல் தொடர்பாக பெறுகைகள வழிகாட்டிக் கோவையின் 8.10.1 இல் காணபிக்கப்படுகின்ற விபரங்களை உள்ளடக்கி அறிவித்தல் ஒன்று நிறுவனத்தின் இணையத்தில் அல்லது ஏனைய பொருத்தமான ஊடகம் ஒன்றில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முறையில் செற்படுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாவட்ட செயலகத்தின் அல்லது மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வழங்குனர் அல்லாத மற்றும் மாதுளை பயிர்செய்கை வழங்குனருக்கு செந்தமாக அல்லாது கிறீன் லங்கா பாம் நிறுவன வழங்குனராக தெரிவு செய்யும் அடிப்படை தெளிவுபடுத்தப்படாதிருந்ததுடன் அந்த நிறுவனத்தைத் தெரிவு செய்யும் போது மாதுளைக் கன்றுகள் வழங்கும் இயலளவு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுவனம் தொடர்பாக விவசாய பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளதுடன அதில் ஏனைய கன்றுகளின் நாற்றுமேடைகள் இந்த நிறுவனத்தினாலும் பதிவுத்தபால் மூம் கேள்வி கோரப்பட்டிருந்தது. மேலும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உரிய நாற்றுமேடைகள் களப்பரிசோதனை மேற்கொண்டதுடன் அந்த சந்தர்ப்பம் வரையில் கன்றுகளை வழங்குவதற்கான இயலுமை காணப்பட்டதுடன் மழை காலத்தில் அதிகரித்தமையால் மாதுளைக் கன்றுகள் வழங்கும் இயலளவுகள் குறைவடைந்தது எங்களின் முடிவாகும். | வெளிப்படையாக வழங்குனர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மாவட்ட செயலகத்தால் 2023 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட 68 பெறுகை நடவடிக்கைகளுக்காக பெறுகைக்குழுக் கூட்டத்தில் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனர் தெரிவு செய்யவதற்கு மாத்திரம் ஆக இருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.5.1(இ) இன் பிரகாரம் பெறுகைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து முடிவு வரை நிறைவேற்ற வேண்டிய பணிகள் தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டி 2.5.1(ஈ) பந்தியின் பிரகாரம் செயற்படுதல் பெறுகைக் குழுவில் முறையாக மேற்கொள்ளப்பட்டதனால் அந்தக் கூட்டங்களுக்கான அறிக்கை தயாரிக்கப்பட வில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தற்போது வரையில் பயன்படுத்த முடியுமான நிலையில் காணப்படுகின்ற மாதம்பை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ வீடு மற்றும் கமநல சேவை நிலையமாக இனங்காணப்பட்ட 02 கட்டிடங்கள் ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துவதற்குத் தேவையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்காமையின் காரணமாக அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. | நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தமையால் மாதம்பை உத்தியோகபூர்வ இல்லத்தை பழுதுபார்க்க வேண்டியுள்ளது. போதியளவான நிதி ஏற்பாடு கிடைக்காமையினாலும் அந்தக் கட்டிடம் பழுதுபார்க்கப்படவில்லை. | உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் அரசாங்கத்தின் கட்டிடங்களை பாதுகாப்பதற்கும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கருவலகஸ்வேவ பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனமாக வழங்கப்பட்டிருந்த கெப் வண்டியின் முழுமையான என்ஜின் பழுதுபார்த்தல் 2021 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 474,450 செலவிடப்பட்டு செய்யப்பட்டிருந்தும் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டியமையால் மீண்டும் செயலிழந்ததுடன் , பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்ட கராஜின் உரிமையாளரால் இத்தவறு தொடர்பாக பொறுப்பேற்க முடியாதென்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | கெப்வண்டியொன்றில் ஏற்பட்டிருந்த கோளாறு நிலைமை தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு ஆரம்ப விசாரணை ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கைவிடப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் வாகனங்களை பாதுகாப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நாத்தாண்டிய நகர எல்லையில் அமைந்துள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான 3.72 ஹெக்டேயர் (09 ஏக்கர் 02 றூட்) பரப்பளவான வணிகப் பெறுமதியுடைய காணி 2021 ஆம் ஆண்டு முதல் 2.5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக | பயனற்றுக் காணப்படுகின்ற இயந்திரப் பொறிமுறைகள் மற்றும் கட்டிடங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போதும் அந்த நிலத்தில் ஒரு பகுதி விதாத்தா | அரசாங்கத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்களிலிருந்து ஆகக்கூடிய அளவில் பயன்படுத்து வதற்கும் வருமானத்தை உழைப்பதற்கும் |

| | | |
|---|---|---|
| பயனற்றுக் காணப்பட்டதுடன் அந்த காணியில் அரசாங்கத்திற்கு வருமானமொன்றை பெறும் வகையில் ஈடுபடுத்துவது தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் கவனம் செலுத்தியிருக்கவில்லை. இதற்கு முன்னர் இந்தக் காணி நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த பிராமல் கிளாஸ் கம்பனி அரசாங்கத்திற்குரிய இந்த காணியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் அந்த நிறுவனம் நடாத்திச் சென்ற 14 கட்டிடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் அந்த நிலத்தில் பயனற்ற வகையில் காணப்படுவதுடன் அழிவடைந்து கொண்டு செல்கின்றது. | நிலையம், விம்சவிய அலுவலகம் மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதேச நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் உடைந்த பகுதிகளை அகற்றியதன் பின்னர் மொத்த நிலத்தையும் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடியதாக இருக்கும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 நட்டம் மற்றும் இழப்பு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022/2023 பெரும்போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் இலவசமாக அரிசியினைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுகின்ற அரிசி வகைகள் முழுமையாக சரியாக இனங்காணப்படாமையின் காரணமாக நலனாளிகளுக்கு சிவப்பு பச்சை அரிசி நிராகரிக்கப்பட்டமையினால் அரிசி எஞ்சியிருந்தமை யால் ரூபா 60,800 பெறுமதியான 380 அரிசி கிலோ கிராம் அழிவடையச் செய்யப்பட்டிருந்த துடன் ரூபா 650,603 தொகைக்கு விலங்கு உணவுகளுக்காக ஏலத்தில் விற்பனை செய்யப் | போக்குவரத்தின் போது அரிசி உறைகள் நனைந்தமை, நலனாளிகளுக்கு அரிசி கையளிக்கப்படாமை, முறையான களஞ்சிய வசதிகள் அலுவலக சுற்றாடலில் காணப்படாமை, மிகுதி அரிசி இருப்புக்களை விரைவாக புத்தளம் மாவட்ட செயலகத்திற்கு சேகரிப்பதற்கு தாமதமடைந்தமை, மிகுதி அரிசி இருப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் 2023 யூலை 17 ஆந் திகதி விநியோகித்தல் அரிசி | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்ட அரிசி கிலோ கிராம் 8030 உற்பத்தி செய்வதற்கு அரசாங்கத்திற்கு ரூபா 1,317,770 செலவினம் செய்யப்பட்டமையினால் ரூபா 667,166 நட்டமும் அரசாங்கத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் அரிசி கிலோ கிராம் 590 குறைவாகப் பயன்படுத்தப்பட்டி ருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | மனித பாவனைக்கு பொருத்தமற்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தது. நலனாளிகளால் எடுத்துச்செல்லப்பட்ட அசிரியில் சிறிய அளவுகளில் பயன்படுத்தப்பட்டு மிகுதி அளவு மீளக் கையளிக்கப்பட்ட 10 கிலோ கிராம் அரிசி உறைகள் வழங்கியதன் காரணமாக இருப்பின் நிறை நிறுக்கும் போது எந்தவொரு அளவும் சிறிதளவு குறைவடைந்திருந்தமையா லும் 04 மாதங்களுக்குப் பின்னர் அரிசி உலர்த்தப்பட்டமையினாலும் நிறை குறைவடைந்துள்ளது. அதனால் அரிசி இருப்பில் மாற்றம் காணப்பட்டது. | |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெற்ற பல வருட காலங்கள் பழைமையான 20 துப்பாக்கிகள் 2024 பெப்ரவரி வரையிலும் மதிப்பீட்டு சபையொன்றின் மூலம் மதிப்பீடு செய்வதற்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் பின்னர் துப்பாக்கிகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் 04 தடவைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் இந்த துப்பாக்கி இருப்புக்கள் அந்த மதிப்பீட்டிற்காக உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | அந்த 20 துப்பாக்கிகளும் கையேற்கப்பட்டு மீண்டும் உரிமையாளர்களுக்கு வழங்கும் வரை பாதுகாப்பாக வைப்புச் செய்வதற்கு குறிப்பொன்று இடப்பட்டமையினால் அந்த துப்பாக்கிகள் மதிப்பீடு செய்யப்படவில்லை. | மதிப்பீடு செய்யப்படாத ஆயுதங்களை மதிப்பீடு செய்வதற்கு தேவையான செயற்பாடுகள் வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாவட்ட செயலகத்தின் பொறியியல் திணைக்களத்தின் வழிகாட்டலின் பிரகாரம் பிரதேச செயலகங்களில் அபிவிருத்தி வேலை விடயங்களுக்காக கிரவல் கியூப் அலகு ஒன்றின் நிலைய விலை (ஏற்றுதல் மற்றும் அரச இறை உள்ளடக்கி) ரூபா 3,000 ஆன மாகாண விலைக் குழுவின் நிலைய விலை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் புத்தளம் மாவட்ட செயலாளரின் இலக்கம் DSP/TFC/CS/01/மீ.க(1) 2021 மற்றும் 2021 சனவரி 01 ஆம் திகதிய மாவட்ட விலைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் கிரவல் கியூப் அலகொன்றை ஏற்றுதல் மற்றும் அரச இறைகளை உள்ளடக்கி நிலைய விலை ரூபா 2,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 13 பிரதேச செயலகங்களில் 89 செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்ட கிரவல் கன மீற்றர் 7482.8 அதாவது 2641.3 கியூப் பயன்படுத்தும் போது ஒரு கியூப்பிலிருந்து ரூபா 1,000 வீதம் ரூபா 2,641,300 நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டிற்காக விலைக்குழு பேணிச் சென்ற விலை குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன் இந்த செயற்திட்டங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்கள் மாகாண விலைக்குழு அறிக்கையை பயன்படுத்தி இருந்தமையினாலும் மாகாண விலைக்குழு பெறுமதி மாவட்ட விலை எண்ணிக்கையினை விட குறைவாக இருந்தமையால் பிரதேச செயலகங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தகாரர்கள் நிராகரித்தமையினால் மாகாண விலைக்குழுக்கள் பயன்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும் எழுத்து மூலம் காணப்படவில்லை. அதன் பிரகாரம் மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கந்தக்குளிய ரான்ஸ்போமர் முதல் முஸ்லிம் வித்தியாலயத்திற்கு செல்கின்ற வீதிக்கு தார் இடுவதற்கான கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் வீதியில் தார் இடப்பட்ட பகுதி 361.46$m^2$ ஆக | மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யும் போது ஒரு பகுதி கீழ் இறங்கி இருந்ததுடன் பாடசாலை வாயிற் கதவைத் தயாரிக்கும் போது ஒரு பகுதியும் அழிவடைந்திருந்தது. | மேலதிக செலுத்துதல்கள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் $334.8m^2$ ஆனமையால் $26.66m^2$ இற்கு ரூபா 2,715 வீதம் ரூபா 72,373 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந் தது. | அதன் பிரகாரம் $361.46m^2$ தார் இடப்பட்ட பகுதி செலுத்தும் போது அளவிடல் அளவு சரியானதாகும். | |
| (உ) | வென்னப்புவ பிரதேச செயலகத்தில் சகனகம விளையாட்டு மருங்கை பாதுகாப்பு வேலியொன்று (வென்லிங்க்வலை) நிர்மாணிப்பதற்காக ரூபா 960,700 செலவிடப்பட்டிருந்த போதிலும் அதில் விளையாட்டரங்கின் பாதுகாப்பு அல்லது அனுமதியற்ற பிடித்தல்கள் நிலையான தீர்வொன்று வழங்கப்படாதிருந்ததுடன் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | நிலத்தின் எல்லையை பாதுகாக்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பு வேலி, ஆரம்ப சந்தர்ப்பத்தில் காணப்பட்ட வகையில் தற்போது காணப்படுவதுடன் பழுதடைந்தவைகளை நிர்மாணிப்பதன் மூலம் செயற்திட்டத்தின் நோக்கம் பாதிப்பு ஏற்படவில்லை. அவ்வாறே வேலியை அமைப்பதற்காக தேவையற்ற செலவினம் செலவிடப்படவில்லை.<br><br>வேலியை நிர்மாணிப்பதற்காக முற்பணமும் செலுத்தப்படவில்லை. நிலத்தில் 1.5m மீற்றர் உயரத்தில் காணப்படுகின்ற GI குழாய் ஸ்தாபித்தல் அதனைச் சுற்றி கொங்கிறீட் இடல், வலை அடிக்கப்பட்டுள்ளது. இது நகர பிரதேசமாக உள்ள விளையாட்டு மைதானமானமையால் மற்றும் தொடர்ச்சியாக விளையாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை யினால் கம்பி வேலி பிரயோக ரீதியில் இல்லாதிருந்ததை அறியத் தருகின்றோம். | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராம சக்தி முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் கீழ் புத்தளம் மாவட்ட செயலகத்திற்குரிய 16 பிரதேச செயலகங்களில் 166 சங்கங்களில் 121 சங்கங்கள் செயலிழந்து காணப்பட்டதுடன் இந்த சங்கங்களில் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 102,385,768 காசு மீதி பயனற்றுக் காணப்பட்டது. | தற்போது சௌபாக்கிய அபிவிருத்தி பணியகத்தின் கீழ் கிராம சக்தி சங்கங்கள் செயற்படுவதுடன் செயலிழந்த கிராம சக்தி சங்கங்களுக்குரிய நிதியங்களை செயற்பாடுள்ள சங்கங்களுக்கு இணங்கி மக்களின் ஜீவனோபாயத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் நுன்நிதிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாடுகளில் இலங்கை மகளிர் பணியகத்தின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் கிராமிய பெண்களின் வருமானத்தை உழைக்கும் வழிகளில் ஈடுபடுத்துதல் மற்றும் வருமானம் உழைக்கும் வழிகளில் ஈடுபட்டிருக்கின்ற பெண்களுக்கு மேலும் ஊக்குவிப்பதற்காக அமுல்படுத்தப்பட்டிருந்த சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரிய 16 பிரதேச செயலகங்களில் பேணிச் செல்லப்படுகின்ற சுழற்சி கடன் நிதியக் கணக்கின் மீதிகளின் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 1,620,000 தொகை | சுழற்சிக் கடன் வழங்கும் நிபந்தனை ஏனைய சங்கங்களின் கடன் வழங்கும் போது காணப்படுகின்ற நிபந்தனைகளுடன் ஒப்பிடும் போது அதிகளவில் மற்றும் ஏனைய சங்கங்களில் இருந்து பெறக் கூடிய கடன் தொகையுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவான கடன் தொகையொன்று சுழற்சி கடன் நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏற்படுகின்றமையினால் பெண்களுக் கிடையே இந்த சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட | செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கத்திற்குப் பதிலாக அந்த நிதியம் பயன்படுத்தப்படாமல் வங்கிக் கணக்குகளில் பயனற்று காணப்பட்டது. | பிரச்சினைகள் அந்த முறையிலே காணப் படுவதுடன் ஏதாவது நியாயமான மட்டத்தில் சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தப்படுமென அறியத் தருகின்றோம். | |
| (இ) | வணாத்துவித்தவில்லு பிரதேச செயலகப் பிரிவில் அரசாங்கத்திற்குரிய காணி 62.5 ஏக்கர் அளவொன்று பல்வேறு நபர்களினால் அனுமதியற்ற வகையில் பிடித்துவைக்கப்பட்டிருந்ததுட ன் இந்த காணியை மீண்டும் அரசாங்கத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்திற்குரிய காணி 62.5 ஏக்கர் அளவு மூன்று நபர்களில் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் காணியை மீண்டும் அரசாங்கத்திற்கு கையேற்பதற்காக ஒரு நபருக்கு பிடித்துவைக்கப்பட்டுள்ள 16 ஏக்கர் காணியும் நீண்ட கால வாடகைக்கு வழங்குவதற்காக கருதப்பட்ட போதும் $1^{1}/_{2}$ ஏக்கர் பகுதி பிடித்து வைத்திருந்த நபரினால் அகற்றப்பட்டுள்ளது. 02 ஏக்கர் பகுதியை பிடித்த வைத்த நபர் காணியிலிருந்து விலகிச் செல்லாமையினால் வழக்குத் தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 43 ஏக்கர் பிடித்துவைத்துள்ள நபருக்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. | காணியை மீண்டும் அரசாங்கத்திற்கு கையேற்பதற்குத் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சிலாபம் பிரதேச செயலகப் பிரிவினால் சிலாபம் நீர்வழங்கல் முறைமைக்காக பொல் மெஸ்வத்த என்ற பெயருடைய காணியில் மொத்தமாக 0.030 ஹெட்டேயர் காணியின் 02 கூறுகள் அரசாங்கத்திற்கு கைப்பெற்றும் போது போலியான உரித்துறுதி | 2006 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2006 செப்டெம்பர் 29 ஆம் திகதி உரித்துறுதி பரிசோதனைக்கு ஒரு நபரினால் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவர் சமர்ப்பித்த ஆவணங்களின் | காணி கைப்பற்றல் சட்டத்தின் பிரகாரம் விரைவாக தேவைாயன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்த நபருக்கு ரூபா 1,000,000 இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் குறித்த உரிமையாளர் சமர்ப்பித்திருந்து பெறப்பட்ட வழக்கு தீர்ப்பின் பிரகாரம் காணி கைப்பெற்றுவதற்காக செலுத்த வேண்டிய வட்டித் தொகையை குறித்த உரிமையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. | அடிப்படையில் சட்டத்தின் 10(1) அ பிரிவின் பிரகாரம் அவருக்கு இழப்பீட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. குறித்த உரிமையாளருக்குரிய கால எல்லையின் போது சமர்ப்பிக்காமையினால் அவரின் உரித்தினை கவனத்திற்கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகள் காணப்படவில்லை. பின்னர் அவரால் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வட்டித் தொகை குறித்த பிணையாளருக்கு (ஆலயத்தின் மதகுரு) செலுத்தப்பட்டுள்ளது. | |
| (உ) | கற்பிட்டி பிரதேச செயலகத்தின் சௌபாக்கிய சமுர்த்தி உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மொத்தமாக ரூபா 6,837,434 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கந்தக்குளிய பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி கிராமம் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் - இல்லாமல் பயனற்றுக் காணப்பட்டது.<br><br>அவ்வாறே வலை வேலிக்காக பயன்படுத்தப்பட்ட 25mm GI குழாய்களில் உரிய பிரகாரம் வர்ணம் பூசப்படாமை மற்றும் குழாய்களை இணைக்குகின்ற இடங்களில் பயன்படுத்தப்பட்ட PVC பகுதி கழன்று சென்றிருந்தமையினால் குழாய்க்குள் நீர் சென்றமையினாலும் துருப்பிடித்திருந்தது. | நாட்டில் காணப்பட்ட சிக்கலான பொருளாதார நிலைமையில் இந்த செயற்திட்டம் தற்போது செயலிழந்த மட்டத்தில் காணப்படுவதுடன் உரிய சங்கங்களுடன் தற்போது கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. வர்ணம் பூசப்பட்டு தேவையான துணைப்பாகங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் விளையாட்டு மைதானத்திற்கு வருகை தருகின்ற தரப்பினர் அனுமதியற்ற வகையில் உள் நுழைந்த சேதப்படுத்தி இருந்தனர். தற்போது குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளது. கேட்வெல் பிரதேச செயலகப் பொறுப்பில் கையளிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறை வேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே ரூபா 50,000 செலவிடப்பட்ட இரண்டு வாயிற்கதவு மேவுகைகள் மற்றும் ரூபா 113,388 செலவில் நீர்க் குழாய் உபரணங்கள் உடைந்து அழிவடைந்திருந்ததுடன் ரூபா 29,850 செலுத்தப்பட்டிருந்த $1^{1}/_{2}$ அங்குல 25 PVC Gate value பொருத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஊ) | நிர்மாணிக்கப்பட்டுகொண்டிரு க்கின்ற மாவட்ட செயலகத்தின் பிரதான கட்டிடத்தின் 14 ஆவது பட்டியலை செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் தீர்க்கப்படுகின்ற செயற்பாடுகளுக்குரிய 14 ஆவது பட்டியலைச் செலுத்துவதற்கு ஏற்பட்ட தாமதத்தால் வட்டியாக ரூபா 10,349,580 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிர்மாணத்தில் காணப்பட்ட குறைபாடுகள் அடிப்படையில் முன்னாளிருந்த உத்தியோகத்தரினால் கொடுப்பனவுகள் ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் செயற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பிணக்குகள் தீர்க்கும் சபையின் செயற்பாடுகள் மற்றும் பிணக்குள் செயற்பாடுகளை கொண்டு செல்லப்பட்டதன் காணரமாக இந்தக் கொடுப்பனவுகள் தாமதமடைந்திருந்ததுடன் பிணக்குகள் தீர்த்தல் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் இந்த தாமத வட்டி உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | 14 ஆவது பட்டியலைச் செலுத்தும் உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் வட்டி செலுத்தாமையால் ஏற்பட்டிருந்தமையி னால் அது தொடர்பாக ஏற்பட்டிருந்தமையி னால் அது தொடர்பான பொறுப்புக்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும். |
| (எ) | புத்தளம் மாவட்ட செயலகத்திற்குரிய தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 255,800,000 ஆன 08 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 01 ஏக்கர் 02 றூட், 14.7 பேர்ச் அளவான காணி புத்தளம் | 2023.06.07 ஆந் திகதி உரிய தரப்பினருடன் விஷேட கலந்துரையாடல் நடாத்தி அமுல்படுத்த வேண்டிய முறை தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. புதிய 04 உத்தியோபூர்வ | தாமதமின்றி காணியை கையேற்று திட்டமிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நகர சபையினால் நிர்மாணிக்கப்படுகின்ற எல்பா வியாபார கட்டடத் தொகுதி மற்றும் அதன் வாகனத் தரிப்பு தளத்திற்காக புத்தளம் நகர சபைக்கு கையளிக்கப் பட்டு அதற்கு பதிலாக புத்தகளம் டிப்போ தளத்திற்கு அருகில் நகர சபைக்குரிய காணியில் 01 ஏக்கர் வழங்கப்பட்டு 08 உத்தியோகபூர்வ இல்லங்கள் தற்போது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு சமமான 04 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான பணம் மாவட்ட செயலகத்திற்கு வழங்குவதற்கு இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் நபர்களுக்கு குடியிருப்பதற்குப் பொருத்தமான நிலைமையில் உள்ள இந்த 08 உத்தியோகபூர்வ இல்லங்களில் 04 இல்லங்களை மதிப்பீடு செய்வதற்கு முன்னர் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதிலும் 2024 மார்ச் வரையிலும் காணி கையளிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படா திருந்ததுடன் தீர்மானம் எடுக்கப்பட்ட பிரகாரம் 04 உத்தியோபூர்வ இல்லங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

இல்லங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான மதிப்பீடு 2023.09.20 ஆம் திகதி புத்தளம் நகர சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**4. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் மாவட்ட செயலகத்தில் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியில் 12 பதவிகளுக்குரிய ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 23 ஆகவும். ஒரு பதவிக்குரிய 09 உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்பட்டது. | 02 மேலதிக மாவட்ட செயலாளர்களும் மற்றும் பிரதேச செயலாளரையும் உள்ளடக்கி உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக காணப்படும் போது கடமைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | காணப்படுகின்ற மிகை மற்றும் வெற்றிட பதவிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | புத்தளம் மாவட்ட செயலகத்திற்குரிய பிரதேச செயலகங்களில் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியினரில் 13 பதவிகளுக்குரிய 314 வெற்றிடங்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்குரிய 116 உத்தியோகத்தர்கள் மிகை காணப்பட்டது. | உத்தியோகத்தர்களின் மிகையாக குறிப்பிடப்படுவது சேவையில் காணப்படுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகும். 204 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் உத்தியோகத்தர் மிகை காணப்படாதிருப்பதுடன் பற்றாக்குறை காணப்படும் எனவும் அறியத்தருகின்றோம். | |